UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வேலுண்டு வினையில்லை

**முனைவர் வெ. ஷீலா**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஜஸ்டிஸ் பஷீர் அகமத்
சயீது மகளிர் கல்லூரி. சென்னை

பண்டைய தமிழ் மக்கள் அகம் புறம் ஆகிய இருவகை வாழ்வினையும் இறைவனை நினைத்தே மேற்கொண்டனர் என்பது சங்க இலக்கியங்கள் உணர்த்தும் உண்மையாகும் . வளமும் வாழ்வும் பெறுவதற்கு ஒளிர்ந்த தெய்வங்களையும், அத்தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அருஞ்செயல்கள், விழாக்கள், வழிபாடுகள் முதலியவற்றையும் சங்க இலக்கியங்கள் சுட்டிச் சென்றுள்ளன. தமிழரகள் தொன்மையான காலத்திலிருந்தே முருகனை வணங்கி வழிப்பட்டு வந்துள்ளனர். **வேலுண்டு வினையில்லை**' குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தமிழ் மரபில் முருகப்பெருமான் வழிபாடு

முருக வழிபாடு தொன்மை வாய்ந்தது. தமிழர்களின் பண்பாடோடும், மொழியோடும் பழக்கவழக்கங்களோடும் பின்னி பிணைந்திருந்தது. தொல்காப்பியம் முருகனைச் சேயோன் எனச்சுட்டுகிறது. சங்க பாடல்களில் முருகப்பெருமானின் பிறப்புமுறை, தோற்றப்பொலிவு பெயரீடுகள், ,ஊர்திகள், கொடிகள், ஆயுதங்கள் மற்றும் தொன்மைச் செய்திகள் எடுத்து இயம்புகிறது. சிக்மன் பிராய்ட் என்ற அறிஞரின் மானுடவியற் கொள்கைப்படி தெய்வவழிபாடு என்பது தனி மனிதனின் உள்மனப் போராட்டத்தின் எதிரொலியாகும். இதனடிப்படையில் தங்களுக்குள் ஒரு தலைவனை உருவாக்கிக் கொண்ட ஆதிகால மக்கள் அவனை "முருகன்" என்றழைத்தனர். ஒரு தலைவனுக்குரிய அழகு, கம்பீரம், வலிமை, கடமையுணர்வு, ஒரு கூட்டத்தை வழிநடத்தும் ஒழுங்குமுறை என்பன அத்தலைவனுக்கு இருந்தன. இதிலிருந்து சங்க காலத்தில் முருக வழிபாடு இருந்தது தெரிய வருகிறது"[1].

“முருகப்பெருமான் ஆறு தலைகளையும், பன்னிரண்டு தோள்களையும் தன்னகத்தே பெற்றவன்”[2] மறி, மயில், சேவல், வில், மான், வாள், ஈட்டி, கோடாரி, மழு, கனல், மாலை, மணி ஆகியவற்றை தன் திருக்கரங்களில் கொண்டவன் என்று முருகனின் தோற்றப் பொலிவை நூல்கள் நவில்கின்றன. குறுந்தொகை கடவுள்வாழ்த்துப் பாடல், முருகப்பெருமான் இவ்வுலகை காத்தலினால்தான் உயிர்கள் நிலைபெற்றுள்ளன எனும் செய்தியைக் கூறுகிறது. திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கந்தபுராணம், சண்முக கவசம், திருப்புகழ், கந்தர் கலிவெண்பா, சட்டி கவசம், கந்தர் அனுபூதி போன்ற நூல்கள் முருகன் பெருமையை எடுத்து இயம்புகின்றன

### தமிழ்த் தொன்மத்தின் தனித்த அடையாளம் வேல்

வேல் ஒரு மிக முக்கியமான ஒரு படைக்கருவியாகவும், முருகப்பெருமானின் கருவியாகவும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேலனாடல் அல்லது வேலன் வெறியாடல் எனத் தனிப்பண்பு சங்க இலக்கியத்தில் அகத் திணைக்கூறாகச் சுட்டப்படுகின்றன.

வேள் என்ற சொல்லினால் சங்கப்புலவர்கள் முருகனைக் குறித்துள்ளனர். வேள் என்ற

சொல்லிற்கு விருப்பம் என்ற பொருளும் உண்டு. இச்சொல்லுடன் செம்மை, நெடுமை, விறல் முதலிய அடைமொழிகள் சேர்ந்து முறையே செவ்வேள், நெடுவேள், விறல் என்ற சொற்களினால் முருகன் மொழியப் பெற்றுள்ளான்.

முருகன் காக்கும் தெய்வம் என்பதை விளக்கும் திருமுருகாற்றுப்படை, முருகனைத் தமிழின் வடிவமாகவும் பார்க்கிறது. மொழி யின் வடிவம் முருகன், அவரது கையில் இருக்கும் வேல் அறிவின் குறியீடு. அறிவுதான் தான் காக்கும் என்பது தமிழரின் நம்பிக்கை. அதனால்தான் தமிழ்க்கடவுள் என்று போற்றப்படும் முருகன் வேலாயுதத்தை தாங்கியவராய் வடிவமைக்கப்பட்டிருக்கிறான். திருமுருகாற்றுப்படையில் 'நூலறி புலவ' என்றே நக்கீரர் முருகனை அழைக்கிறார்.

மகாகவி பாரதியார் 'அறிவே தெய்வம். ஞானமே எங்களை வழிநடத்தும் எல்லாவற்றி யிலிருந்தும் எம்மை காத்து நிற்கும் என்று பாடியுள்ளார்.' உயிர் முனைப்பிற்கும் இறைவனின் அருளிற்கும் நடக்கும் போரே முருகனின் போர் எனவே முருகனது வேல் ஞானசக்தி'[3] என்கிறார் திரு.வி.க. 'கடவுட் கோட்பாட்டில் முதலில் தோன்றியது என்பதும் அறியப்படுகின்றது.முருக வழிபாடு குறித்த கோட்பாடே தமிழ்நாட்டில் முருக வழிபாட்டிற்குத் தோற்றமாயிருந்தது. வேலன் வெறியாடல் இது ஓர் இனக்குழு வழிபாட்டு முறை என்பர்'[4].

**வேலின் தோற்றம்**

பகைவரை அழித்து உலகிற்கு நன்மை பயக்கச் சிவசக்தி அருளாக வேல் தோன்றிற்று. சிவபெருமான் சூரபத்மனை அழிக்க 'பதினொரு உருத்திரர்களையும் பதினொரு ஆய்தங்களையும் முருகன் கையில்கொடுத்து, ஐந்து பூதங்களையும் அழிக்கக்கூடியதும் எவர் மேல் விடுத்தாலும் அவருடைய வலிமைகளையும் வரங்களை யும் கெடுத்து, உயிரைப் போக்ககூடியதும், படைக்கலங்களுக்கும் தலைமையானதும் ஆகிய வேலைக் கையில் கொடுத்தார்'[5] என்று கந்தபுராணம் சுட்டுகிறது. உமா தேவியார் முருகனை அழைத்து வாழ்க வாழ்க என்றுச் சொல்லி வேல் அளித்ததை 'எம் புதல்வன் வாழி வாழி எனும் படி வீரவேல் தர' என்று திருச்செந்தூர் திருப் புகழில் அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பராசக்தி அளித்த வேல் நீதி மற்றும் தர்மத்தை பாதுகாக்கவும் தீய சக்தியை வெல்வதற்கும் உதவுகிறது. எனவே, நவசக்தியே வேலாயதத்தின் வடிவாய் முருகபெருமான் திருக்கரத்தில் விளங்குகின் றாள்.

**முருகன் கை வேல்**

சங்க காலத் தமிழ் மண்ணில் வேல் வழிபாடே மிகுந்திருந்தது. வேல் வழிபாடு முருகன் வழிப்பாடாகத் திகழ்ந்தது. **"விறல்வெய்யோனூர் மயில் வேனிழனோக்கி"**[6] என்ற வரியில் செவ்வேள் பகைவரைக் கொன்ற வேலினை உடையவன் என்று சுட்டுகின்றது. வேல் பற்றிய செய்தி **"வென் வேலான் குன்றின்மேல் விளையாட்டும்"**[7], **"சூர் கொன்ற செவ்வேலால்பாடி"**[8] **"குருகு எறி வேலோய்"**[10], என இடம்பெற்றுள்ளன, மேலும், குருகுபெயர்க்குன்றம் என அழைக்கப் படும் ஒரு மலையை தன் வேல் கொண்டு அழித்ததை. குறுந்தொகையிலும், **"குன்றின் நெஞ்சு பக எறிந்த அம் சுடர் நெடு வேல்"**[9], **சூர் மா முதல் தடிந்து"**[10] பரிப்பாடலிலும், வேல் பகைமையை அழிக்கும் ஆற்றல் பெற்றது என்பது விளங்குகிறது. சிலப்பதிகார த்தில் வேலுக்கு தனிக்கோட்டமே இருந்தது. பழமுதிர்ச்சோலை, திருச்செங்கோடு உள்ளிட்ட ஊர்களில் வேல் வழிபாடு நடைமுறையில் உள்ளது.

**வேல் பொருள் விளக்கம்**

'வெல்' என்ற வினைச்சொல்லே நீண்டு வேல் என்ற பெயர்ச்சொல் ஆகிறது. வெல் என்ற சொல்லின் அடியாகத் தோன்றிய வேல் வெற்றியின் அடையாளமாகத் திகழ் கிறது. வேலின் வடிவம் அறிவு ஆழமான தாகவும், பரந்ததாகவும், கூர்மையானதாக வும் இருக்கவேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் நீண்ட அடிப்பகுதியையும், மேல்பகுதியின் அடி அகன்றும், நுனிப்பகுதி கூர்மையானதாகவும் அமைந்துள்ளது. ஆணவம். கன்மம், மாயை என்ற பகைவர் களை வேலினால் அழித்து அருள் பாலிக்கும் சிறப்பினால் முருகனை வேலவன், வேல்வல்லான், வென்வேலான் என்ற சொற் களினால் சங்கப் புலவர்கள் சுட்டியுள்ளனர்.

அயில், ஆரணம், உடம்பிடி, எஃகு, எஃகம், குற்றம், சக்தி, ஞாங்கர், மதங்கு, வாகை, விட்டேறு ஆகும் சக்திவேல், வஜ்ரவேல், இலைவேல், நெடுவேல் இரத்தினவேல், தங்க வேல், முத்துவேல், மந்திரவேல், உத்தண்ட வேல், சக்ரவேல், வெள்ளிவேல், எஃகு என பல வகைகள் உள்ளன.

**வேலும் முருகனும் ஒன்றே**

வேல் முருகனின் வடிவாமாகவே கருதப்

படுகின்றது. முருகனை மனதார வழிப்படும் அன்பருக்கு துணையாக இருப்பது வேல். வேல் தன்னை ஏந்தியவருக்கு வெற்றியைத் தருவதால் இது வெற்றிவேல், வெற்றி இருக்கும் இடத்தில் வடிவேலன் இருப்பான் வேலினையும் முருகனையும் பிரிக்க முடியாது. வெற்றிவேல், வீரவேல் என முழங்கும் இடத்தில் வேலனின் ஆற்றலும், முருகனின் அருளும் கிட்டும். தீயசக்திகளை ஒடுக்கி அழித்து, மெஞ்ஞானத்தை அருள் வதும் முருகன் கை வேலாகும். அதனால், வேல் விடுமினையோன், திறன் வேலன், வேல் கொண்டன்று பொருத்தவீரன், துங்க வடிவேலன், ப்ரசண்ட வடிவேலன், எனப் பலவாறாக முருகனை அருணகிரியார் புகழ்ந்துரைக்கின்றார்.

**வேலுண்டு வினையில்லை**

வேல் வினைதீர்க்கும் என்பதினை அருண கிரியார் வாழ்க்கையின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். அவர் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் நிலையில் 'அருணகிரி நில்' என்று கூறி அவரைக் காப்பாற்றி வேலால் நாவிலே சரவணபவ என்ற மந்திரத்தை எழுதி அருணகிரியாரின் பாவ பிணிகளை நீக்கி, சிந்தனைத் தெளிவையும், மெஞ் ஞானத்தையும் அருளினார் முருகப்பெருமான். அருள் பெற்ற அருணகிரியாரும், வேலின் ஆற்றலை எடுத்துக்காட்ட வேல் வகுப்பு, வேல் விருத்தம் பதிகங்களைப்பாடினார். வேலானது இருளினை அகற்றக்கூடிய சுடரொளிகளான தீ, சூரியன், மற்றும் சந்திரன் ஆகிய இயற்கைச் சக்திகளை விளக்கக் கூடிய குறியீடெனக் குறிப்பிடுகின் றார் விதவிதமான வேல்களும் முருகனுக்கு அடிபணிந்து பக்தர்களின் துயர் துடைக்க பறந்தோடி வருகின்றது. அதனால்தான் வேலுண்டு வினையில்லை. இவரைத் தொடர்ந்து, வேல் வெளிப்பகையை மட்டும் அல்லாமல் உள் பகையை அழிக்கும் ஆற்றல் கொண்டது என பாம்பன் சுவாமிகள் வேலினை படைஅரசு எனப் போற்றுகின்றார் பாம்பன் சுவாமிகளும், வள்ளிமலை சுவமிகளும் வேல் மாறல், வேற்பதிகம் போன்ற பதிகங்களில் வேல் வினைத்தீர்க்கும் எனப் பாடியுள்ளனர்.

முருகா என்று ஓதுவார் மனதில் அச்சம் தோன்றினால் ஆறுமுகம் தோன்றும் கடுமையான மனப்போராட்டத்தில் இருக்கும் போது அஞ்சேல் என்று வேல் தோன்றும் என்கிறார் நக்கீரர். 'சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்''[11] என்று பாரதியார் சுட்டுகின்றார். தேவராய சுவாமிகள், வாழ்க்கையில் எப்பேர்ப்பட்ட தடைகள், பிரச்சனைகள், துன்பங்கள் இருந்தாலும் அத்தனையும் அறுத்தெறிந்து நம்பியவர் களைக் காக்கும் என 'சத்ரு சம்கார் வேல்' பதிகத்தைப் பாடியுள்ளார்.

**முடிவுரை**

உடல் பிணிகளையும், வினைப்பிணிகளை யும் நீக்கும் மருந்தாக விளங்கும், முருகா என்று அழைத்தால் முன் வந்து வேல் நிற்கும் நன்மைச் சுற்றி நிற்கும் பகையை அறுக்கும் வெற்றியின் குறியீடாக நின்றுகாக்கும், மனக்கலக்கத்தைப் போக்கும் முருகன் கைவேல் சூரர் குலத்தை அழித்ததோ அவ்வாறு நம்மை நாடி வந்த வினையெல்லாம் வேரோடு அழிக்கும் முருகப்பெருமானை மனதில் நிருத்தி வழிப்பட்டால் வேலுண்டு வினையில்லை.

**அடிக்குறிப்பு**

1. https:/Wikipedia.org/4sc
2. பரிப்பாடல் பா.எண்-21
3. தி.ரு.க, முருகன் அல்லது அழகு,ப.67
4. நாகப்ப நாச்சியப்பன், திருக்கோவில் வழிபாடு ப.2
5. கந்தபுராணம் –பா.எண் -1303
6. பரிபாடல் -21
7. கலித்தொகை – 27
8. கலித்தொகை – 93
9. கலித்தொகை – 104
10. பரிப்பாடல் பா.எண்-05
11. பாரதியார் கவிதைகள், ஆறுதிணை, பா.எண் -3,ப,160

**பார்வை நூல்கள்**

1. தி.ரு.க, முருகன் அல்லது அழகு,ஜீவன் பிரஸ்,சென்னை,1982
2. நாகப்ப நாச்சியப்பன்,திருக்கோவில் வழிபாடு,சென்னை
3. பாரதியார் கவிதைகள்,சுப்பிரமணிய பாரதி,
4. கந்தபுராணம்
5. அண்ணாமலை, வே. (2000), சங்க இலக்கியத்தில் தொன்மக்களஞ்சியம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்